## வி.எண் : 41 – படிவத்தினை நிரப்புதல்

**குறிப்பு :**

இவ்வினாவானது 'படிவங்களை நிரப்புக' என்ற வடிவில் அமையும். விடைத்தாளில் நான்கு படிவங்கள் கொடுக்கப்பட்டிருக்கும். அப்படிவங்களிலிருந்து வினாத்தாளில் கேட்கப்பட்டிருக்கும் படிவத்தை மட்டும் சரியாக தெரிவு செய்து வினாவிலுள்ள விவரங்களை நிரப்ப வேண்டும்.

1. நூலக உறுப்பினர் படிவத்தை நிரப்புக. (அல்லது) அமுதன் தன் தந்தை மாணிக்கமணி அவர்களிடம் நூலகத்தில் உறுப்பினர் ஆக வேண்டினான். அவரும் அமுதனிடம் 200/- ரூபாயும், 15 காந்தி தெரு, குமாரபாளையம், நீலகிரி மாவட்டம் என்ற முகவரியிட்ட அடையாளச் சான்றையும் கொடுத்தார். கிளை நூலகத்திற்குச் சென்ற அமுதனாக, தேர்வர் தன்னைக் கருதி, கொடுக்கப்பட்ட நூலக உறுப்பினர் படிவத்தை நிரப்புக. **(TB) (இயல் - 5) [PTA – 3, 4, APR - 2023]**

### நூலக உறுப்பினர் படிவம்

***நீலகிரி*** மாவட்ட நூலக ஆணைக்குழு

மைய / கிளை / ஊர்ப்புற நூலகம் ***மைய நூலகம் - நீலகிரி மாவட்டம்***

**உறுப்பினர் சேர்க்கை அட்டை**

அட்டை எண்: உறுப்பினர் எண்:

| | | |
|---|---|---|
| 1. பெயர் | : | **மா. அமுதன்** |
| 2. தந்தை பெயர் | : | **மாணிக்கமணி** |
| 3. பிறந்த தேதி | : | **27.12.2002** |
| 4. வயது | : | **17** |
| 5. படிப்பு | : | **பத்தாம் வகுப்பு** |
| 6. தொலைபேசி / அலைபேசி எண் | : | **9777765000** |
| 7. முகவரி (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) | : | **15 காந்தி தெரு, குமாரபாளையம், நீலகிரி – 643 102.** |

நான் **நீலகிரி மைய** நூலகத்தில் உறுப்பினராகப் பதிவுசெய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ **150/-** சந்தா தொகை ரூ **50/-** ஆக மொத்தம் ரூ **200/-** செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் : **நீலகிரி** தங்கள் உண்மையுள்ள,

நாள் : **15.05.2023** **மா. அமுதன்**

திரு/திருமதி/செல்வி/செல்வன் **மா. அமுதன்** அவர்களை எனக்கு நன்கு தெரியும் எனச் சான்று அளிக்கிறேன்.

பிணைப்பாளர் கையொப்பம்

அலுவலக முத்திரை (பதவி மற்றும் அலுவலகம்)

(மாநில / மைய அரசு அதிகாரிகள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், உயர் / மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள், சட்டமன்ற / நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகராட்சி / மாநகராட்சி / ஒன்றிய / பேரூராட்சி உறுப்பினர்கள்)

2. கொடுக்கப்பட்ட மேல்நிலை வகுப்புச் சேர்க்கை விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்க. (அல்லது) வீட்டு எண் : 21, வ.உ. சிதம்பரனார் தெரு, கரூர் மாவட்டத்தில் அரசு மேல்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பினை நிறைவு செய்த வெற்றிச்செல்வனின் மகன் குணசேகரன் மேல்நிலை வகுப்பில் சேர விரும்புகிறார். தேர்வர் தன்னை குணசேகரனாகக் கருதி கொடுக்கப்பட்ட மேல்நிலை வகுப்புச் சேர்க்கை விண்ணப்பப்படிவத்தினை நிரப்புக. **(TB) (இயல் - 9) [PTA – 2, 6, MAY- 2022]**

## மேல்நிலை வகுப்பு – சேர்க்கை விண்ணப்பம்

சேர்க்கை எண் : **101** தேதி : **06 / 05 / 2023** வகுப்பும் பிரிவும் : **11 - அ**

1. மாணவரின் பெயர் : **வெ. குணசேகரன்**
2. பிறந்த தேதி : **14.04.2006**
3. தேசிய இனம் : **இந்தியன்**
4. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் : **வெற்றிச்செல்வன்**
5. வீட்டு முகவரி : **வீட்டு எண்-21, வ.உ. சிதம்பரனார் தெரு, கரூர்.**
6. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு : **பத்தாம் வகுப்பு**
7. பயின்ற மொழி : **தமிழ்**
8. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி : **அரசு மேல்நிலைப் பள்ளி, கரூர்.**
9. பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் : **464 / 500**

| தேர்வின் பெயர் | பதிவுஎண் - ஆண்டு | பாடம் | மதிப்பெண்கள்(100) |
|---|---|---|---|
| இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் தேர்வு | 145772 - 2019 | தமிழ் | 94 |
| | | ஆங்கிலம் | 79 |
| | | கணிதம் | 96 |
| | | அறிவியல் | 98 |
| | | சமூகஅறிவியல் | 97 |
| | | மொத்தம் | 464 |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? : **ஆம்**
11. தாய்மொழி : **தமிழ்**
12. சேர விரும்பும் பாடப்பிரிவும் பயிற்று மொழியும் : **உயிரியல் - கணிதவியல் - தமிழ் வழி**

மாணவரின் கையெழுத்து

**வெ. குணசேகரன்**

3. கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்க. (அல்லது) கடலூர் மாவட்டம், பாரதியார் நகர், கம்பர் தெருவிலுள்ள 112-ஆம் இலக்க வீட்டில் குடியிருக்கும் நிலவனின் மகள் பூங்குழலி, நகராட்சி மேல்நிலைப் பள்ளியில் படிக்கிறார். அவர் விளையாட்டு மேம்பாடு ஆணையத்தில் உறுப்பினராகச் சேர்ந்து கால்பந்து விளையாட்டில் பயிற்சி பெற விரும்புகிறார். தேர்வர், தம்மை பூங்குழலியாகக் கருதி, கொடுக்கப்பட்டுள்ள உறுப்பினர் சேர்க்கைப் படிவத்தை நிரப்புக.

**[PTA – 1, SEP - 2021]**

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பப் படிவம்

1. மாணவரின் பெயர் : **நி. பூங்குழலி**
2. பாலினம் : **பெண்**
3. பிறந்த தேதி : **01-03-2001**
4. தேசிய இனம் : **இந்தியன்**
5. இரத்த வகை : **'O' positive**
6. உயரம் மற்றும் எடை : **170 செ.மீ, 68 கி.கி**
7. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் : **நிலவன்**
8. வீட்டு முகவரி : **112, கம்பர் தெரு, பாரதியார் நகர், கடலூர்.**
9. தொலைபேசி / அலைபேசி எண் : **9867364583**
10. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு: **பன்னிரெண்டாம் வகுப்பு**
11. பள்ளியின் முகவரி : **நகராட்சி மேல்நிலைப் பள்ளி, கடலூர்.**
12. சேரவிரும்பும் விளையாட்டு : **கால்பந்து**

மாணவரின் கையெழுத்து

சேர்க்கை எண் : 152 **நி. பூங்குழலி**

தேதி : **11.07.2023**

பெற்றோர் / பாதுகாவலரின் கையெழுத்து

இடம் : **கடலூர்** **நிலவன்**

4. எண்-6, பாரதியார் தெரு, நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் தமிழரசுவின் மகள் பூங்கொடி, கணினிப் பயிற்றுநர் பணி வேண்டி தன்விவரப் பட்டியலை நிரப்புகிறார். தேர்வர், தன்னை பூங்கொடியாகப் பாவித்து பணி வாய்ப்பு வேண்டி தன்விவரப் பட்டியலை நிரப்புக. (அல்லது) எழுத்தர் பணியினை வேண்டி, வேலைவாய்ப்பிற்காக கொடுக்கப்பட்ட தன்விவரப் பட்டியலைப் பூர்த்தி செய்க. (அல்லது) தட்டச்சர் பணிவாய்ப்பு வேண்டித் தன்விவரப் பட்டியல் ஒன்றை நிரப்புக. (அல்லது) பணி வாய்ப்பு வேண்டி தன் விவரப் பட்டியல் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களைக் கொண்டு படிவத்தை நிரப்புக. பெயர் : அருளன், தந்தை : செல்வம், முகவரி : கதவு எண். 25, திலகர் தெரு, மதுரை வடக்கு - 2.

**[MDL – 19, PTA – 5, SEP - 2020, AUG – 2022]**

(**குறிப்பு** : கீழ்க்கண்ட படிவத்தில் முதலில் கேட்டகப்பட்ட வினாவிற்கு, கணினிப் பயிற்றுநர் பணி வேண்டி தன்விவரப் பட்டியல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இதேபோன்று மற்ற வினாத்தாள்களில் கேட்டகப்பட்ட வினாவிற்கு நீங்கள் சுயமாக தன்விவரப் பட்டியலை பூர்த்தி செய்து கொள்ளவும்.)

## பணி வாய்ப்பு வேண்டி தன்விவரப் பட்டியல் நிரப்புதல்

| | | |
|---|---|---|
| 1. | பெயர் | : **த. பூங்கொடி** |
| 2. | பாலினம் | : **பெண்** |
| 3. | பிறந்த நாள் மற்றும் வயது | : **23.10.1996, 26** |
| 4. | தேசிய இனம் | : **இந்தியன்** |
| 5. | பெற்றோர் / பாதுகாவலர் பெயர் | : **தமிழரசு** |
| 6. | வீட்டு முகவரி | : **6, பாரதியார் தெரு, நீலகிரி.** |
| 7. | தொலைபேசி / அலைபேசி எண் | : **8999632584** |
| 8. | பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் | : **426 / 500** |
| 9. | தாய்மொழி | : **தமிழ்** |
| 10. | பயின்ற மொழிகள் | : **தமிழ், ஆங்கிலம்** |
| 11. | தட்டச்சு | : **தமிழ், ஆங்கிலம் - சீனியர் கிரேடு** |
| 12. | கணினி | : **PGDCA and Tally** |

மேற்கண்ட விபரங்கள் அனைத்தும் உண்மையென உறுதி கூறுகிறேன். தங்கள் நிறுவனத்தில் **கணினிப் பயிற்றுநர்** பணியினைத் தந்தால், என் பணியைச் சிறப்பாகவும் உண்மையாகவும் செய்வேன் என உறுதியளிக்கிறேன்.

இப்படிக்கு

தங்கள் உண்மையுள்ள,

**த. பூங்கொடி**